ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | சந்தைத் தொழிற்பாடுகள் திணைக்களம் |
| --- | --- |
| திகதி | 2025 யூலை 31 |

**இலங்கை மத்திய வங்கி சந்தைத் தொழிற்பாடுகள் அறிக்கை- 2025 யூனினை வெளியிடுகின்றது**

இலங்கை மத்திய வங்கி அதன் மூன்றாம் சந்தைத் தொழிற்பாடுகள் அறிக்கையினை 2025 யூலை 31ஆம் திகதி வெளியிட்டது. நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த செலாவணி வீத முறையினால் ஆதரவளிக்கப்பட்டு, நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடலின் கீழ் நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் மத்திய வங்கி மேற்கொண்ட நாணய தொழிற்பாடுகளையும் செலாவணி தொழிற்பாடுகளையும் பற்றி ஆர்வலர்களுக்கிடையில் விழிப்புணர்வையும் அறிவையும் மேம்படுத்துவது சந்தைத் தொழிற்பாடுகள் அறிக்கையின் இலக்காகும்.

பிந்திய அறிக்கையானது, 2025ஆம் ஆண்டின் முதலரைப்பகுதியில் முக்கிய கொள்கை வழிமுறைகள், திரவத்தன்மை போக்குகள், குறுங்கால வட்டி வீதம் மற்றும் செலாவணி வீத அசைவுகள், நாணயச் சந்தை மற்றும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை தொழிற்பாடுகள் போன்றவற்றை தொகுத்து வழங்குகின்றது. சந்தைத் தொழிற்பாடுகள் அறிக்கையானது, சமகால தலைப்புகள் தொடர்பான இரு சிறப்புக் கட்டுரைகளை வழங்குவதோடு சந்தை தொழிற்பாடுகளினதும் கொடுக்கல்வாங்கல்களினதும் தெரிவுசெய்யப்பட்ட குறிகாட்டிகளையும் உள்ளடக்குகின்றது.

**முக்கிய சிறப்புக்கூறுகள்:**

- 2025ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் உள்நாட்டு நாணயச் சந்தையில் திரவத்தன்மை சீராக மிகையான மட்டங்களில் காணப்பட்டது.
- சந்தை பங்கேற்பாளர்களுக்கும் சந்தை நடவடிக்கைகளுக்கும் மத்தியில் மேம்பட்ட திரவத்தன்மையை கருத்திற்கொண்டு, நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களை நடாத்துவதன் மூலம் உள்நாட்டு நாணயச் சந்தையில் இலங்கை மத்திய வங்கியின் தலையீடு 2025 சனவரி மாத இறுதியில் இருந்து நிறுத்தப்பட்டது.
- குறுங்கால வட்டி வீதங்கள் ஓரிரவு கொள்கை வீதத்துடன் இசைந்து செல்லும் விதத்தில் பெருமளவிலான உறுதிப்பாட்டினை எடுத்துக்காட்டின.
- மேம்பட்ட சந்தை நடவடிக்கைகளுடன், வங்கிகளுக்கிடையிலான சந்தை இயல்புநிலையின் சமிஞ்சைகளை காண்பித்துள்ளது.
- ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபா சிறிதளவு தேய்வடைந்தது.
- வெளிநாட்டு ஒதுக்குகளை கட்டியெழுப்புவதற்காகவும் செலாவணி வீதத்தில் மிகையான தளம்பலினை கட்டுப்படுத்துவதற்கும் உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் இலங்கை மத்திய வங்கி தலையீடுசெய்தது.

சந்தைத் தொழிற்பாடுகள் அறிக்கையானது இலத்திரனியல் வடிவில் கிடைக்கப்பெறுவதுடன் மத்திய வங்கியின் வலைத்தளத்தினூடாகப் பார்வையிடலாம்.

https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/publications/market_operations_report_june_2025_t.pdf